கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 03.12.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் இயந்திரங்கள் இயக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த செய்முறைப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் செயல்படும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தின், வேளாண் இயந்திரவியல் மற்றும் சக்தி பொறியியல் துறை, நான்முதல்வன் திட்டத்தின் கீழ், வெற்றி நிச்சயம் முயற்சியின் மூலம் தமிழகத்தின் வேலைவாய்ப்பு இல்லா இளைஞர்களுக்கான திறன் பயிற்சி திட்டத்தை நடத்தி வருகிறது. "வேளாண் இயந்திரங்கள் இயக்கம் மற்றும் பராமரிப்பு" (Non–NSQF) எனும் இந்தப் பயிற்சி 30.10.2025 முதல் 21.11.2025 வரை நடைபெற்றது. இத்திட்டம் முனைவர். A. ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்), அவர்களால் முறையாக தொடங்கிவைக்கப்பட்டது. தனது தலைமை உரையில், நான்முதல்வன் திட்டம் வழங்கும் இந்த வாய்ப்பை பயனுள்ளவாறு பயன்படுத்தி தங்கள் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த ஊக்குவித்தார். மேலும், இயந்திரமயமாக்கல் வேளாண் திறனை உயர்த்துவதிலும், உழைப்பை குறைப்பதில், உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும் மிக முக்கிய பங்கு வகிப்பதையும் வலியுறுத்தினார். தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தி, வேலைவாய்ப்புக்குத் தயாரான இளைஞர்களை உருவாக்குவதில் TNSDC மற்றும் TNAU இணைந்து செய்யும் பங்களிப்பை அவர் பாராட்டினார். சிறப்பு உரையில் முனைவர். R. கவிதா, பேராசிரியர் & துறைத் தலைவர், நவீன வேளாண்மையின் தேவைகளுக்கு ஏற்ப நடைமுறைத் திறன்களைப் பெறுவதற்காக பங்கேற்பாளர்களை ஊக்குவித்தார். முனைவர். P. சுதாகர், இணைப் பேராசிரியர், பயிற்சி திட்டத்தின் பாடத்திட்டம் மற்றும் கட்டமைப்பை விளக்கினார். இந்தப் பாடத்திட்டம், நிலத் தயாரிப்பு முதல் அறுவடை வரை உள்ள அனைத்து வேளாண் செயல்பாடுகளிலும் பயன்படும் இயந்திரங்களின் அமைப்பு, சீரமைப்பு,

இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை முழுமையாக உள்ளடக்கியது. இந்தப் பயிற்சியை முனைவர். P.தனஞ்செழியன், உதவிப் பேராசிரியர், அவர்களால் ஒருங்கிணைக்கப்படுகிறது. தொழிற்துறை மற்றும் வேளாண் பின்னணியைக் கொண்ட மொத்தம் 25 பயிற்சியர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்று வருகின்றனர். நிகழ்ச்சி நிறைவில் நன்றி உரையை முனைவர். S. தம்பிதுரை வழங்கினார். இந்தப் பயிற்சி, வேளாண் இயந்திர பராமரிப்பு துறையில் தொழில்முனைவு மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறித்த வழிகாட்டுதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பயிற்சியை முடித்த பின் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**